**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2013-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27-ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **" காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது "**

**பொருள் :** **உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி மிகச் சிறியதாக இருப்பினும், அதன் பயன் இவ்வுலகை விட மிகப் பெரியதாகும்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) <u>சி.டபிள்யு.2/ 39280/2011</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி **19.10.2012**-ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.321</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

**2) B1/000773/13**

மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிதித்துறை அரசு ஆணை எண்.5, நாள் : 09.01.2013-ன்படி A மற்றும் B பிரிவு பணியாளர்களுக்கு ரூ.1000/-மும் C மற்றும் D பிரிவு பணியாளர்களுக்கு ரூ.3000/-மும் இதர பணியாளர்களுக்கு அரசு உத்தரவின்படி 2011-12 ஆம் ஆண்டிற்குரிய அடஹாக் பொங்கல் போனஸ் வழங்கிய உத்திரவினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.322**
**பதிவு செய்யப்பட்டது**

**3) B11/000939/13**

மதுரை மாநகராட்சியிலிருந்து 1954 நபர்கள் மாதாந்திர ஓய்வூதியமும், 1832 நபர்கள் மாதாந்திர குடும்ப ஓய்வூதியமும் பெற்று வருகின்றனர்.

அரசாணை எண்.6, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள்:09.01.2013–ல் மதுரை மாநகராட்சியிலிருந்து ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கு 2011-12ம் ஆண்டிற்கு ரூ.500/-ஐ (ரூபாய் ஐநூறு மட்டும்) பொங்கல் பரிசாக வழங்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு:** மேற்காணும் அரசாணைக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு 3228 ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு தலா ரூ.500/- வீதம் மொத்தம் ரூ.1614000/- (3228X500=ரூ.1614000/-) பொங்கல் பரிசாக வழங்கப்பட்டது.

**மாமன்றத்தீர்மானம் எண்.323**
**பதிவு செய்யப்பட்டது**

**4) ம.நி.1/8167/2012**

மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் & 11 ஊராட்சிகள் ஆகியவற்றின் பணியாளர்களை (நிரந்தர பணியாளர்கள் – 207, தொகுப்பூதிய பணியாளர்கள் 368, தினக்கூலி பணியாளர்கள் 5 ) மதுரை மாநகராட்சியில் ஈர்த்துக் கொள்வதற்கான அரசாணை நிலை எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை நாள்:19.12.12-ஐ மன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.324**
**பதிவு செய்யப்பட்டது**

**5) மநி 2/029785/2012**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண். 1–ல் (முன்னாள் விளாங்குடி பேரூராட்சி) பணியாற்றும் திரு.க.பாலகுருநாதன், பணி ஆய்வாளர் (பணியேற்பாட்டின்கீழ் தொழில்நுட்ப உதவியாளர்) தன்னுடைய மனுவில் தனது வயதான தாயாரை உடனிருந்து கவனிக்கும் பொருட்டு, தன்னை தனது தாய்த்துறையான பேரூராட்சிக்கே தன்னை திரும்ப அனுப்பி வைக்குமாறு மனு சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் அரசாணை எண். 220, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை, நாள்:25.11.2011-ன் (3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 11 ஊராட்சிகள்) அடிப்படையில் மாநகராட்சியுடன் இணைந்து பணியாற்றி வருகிறார். தற்போது மனுதாரரின் கோரிக்கையை ஏற்று ஒரு வழி பணிமாறுதலில் அன்னாரின் தாய்த்துறையான பேரூராட்சிகள் பணிக்கு அனுப்பி வைக்க (இயக்குநர், பேரூராட்சிகள், சென்னை) மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.325**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) ம.பொ 1/01152/2008(ம.நி.10)**

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் கழகத்தை சார்ந்த (Texco-Chennai, The Government of TamilNadu Undertaking) சார்ந்த பணியாளர்கள் கீழ்கண்டுள்ளபடி பணிபுரிந்து வருகின்றார்கள்.

| | | | |
|---|---|---|---|
| **1)** | ஆணையாளர் அவர்களின் காவலர் (Security Guard) | - | 1 நபர் |
| **2)** | ராஜாஜி குழந்தைகள் பூங்கா–எலெக்ட்ரிக் & மெக்கானிக் | - | 1 நபர் |
| **3)** | லாரி ஸ்டாண்ட் – காவலர் (Security Guard) | - | 6 நபர்கள் |
| **4)** | சுகாதார பிரிவு – ஓட்டுநர் (Driver) | - | 7 நபர்கள் |
| **5)** | லாரி ஸ்டாண்ட் ஓட்டுநர் (Driver) | - | 5 நபர்கள் |
| **6)** | மாநகராட்சி மெக்கானிக் (Mechanic) | - | 13 நபர்கள் |

**7)** ஈகோபார்க் காவலர் (Security Guard) - 7 நபர்கள்

**8)** வெள்ளக்கல் காவலர் (Security Guard) - 6 நபர்கள்

--------

**மொத்த பணியாளர்கள் 46 நபர்கள்**

---------

மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்த பணியாளர்களுக்கு 31.03.2013 வரை ஒப்பந்த காலத்தை நீடிப்பு செய்து கட்டணப்பட்டியலில் வழி செய்யப்பட்டுவிட்டது.

எனவே மேற்படி நிறுவனத்திற்கு பணியாளர்களின் வருகை பதிவேட்டின் அடிப்படையில் தொடர்ந்து கட்டணப்பட்டியல் வழங்கவும், ஒப்பந்த காலத்தினை 31.03.2014 வரை நீடிப்பு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு :**

A.டெஸ்கோ என்பது The Government of TamilNadu Undertaking அரசு சார்பு நிறுவனம் ஆகும்.

1) மெக்கானிக் மாத கட்டணம் ரூ.8,405/- (8 மணி நேர வேலை) + சேவை கட்டணம் 12% + சேவை வரி 10% + கல்வி வரி 2% + உயர்நிலைக் கல்வி வரி 1% ஆக மொத்தம் ரூ.10,383/-.
2) டிரைவர் மாத கட்டணம் ரூ.8,405/- (8 மணி நேர வேலை) + சேவை கட்டணம் 12% + சேவை வரி 10% + கல்வி வரி 2% + உயர்நிலைக் கல்வி வரி 1% ஆக மொத்தம் ரூ.10,383/-.
3) தலைமை காவலர் மாத கட்டணம் ரூ.8,405/- (8 மணி நேர வேலை) + சேவை கட்டணம் 12% + சேவை வரி 10% + கல்வி வரி 2% + உயர்நிலைக் கல்வி வரி 1% ஆக மொத்தம் ரூ.10,383/-.
4) காவலர் மாத கட்டணம் ரூ.7,191/- (8 மணி நேர வேலை) + சேவை கட்டணம் 12% + சேவை வரி 10% + கல்வி வரி 2% + உயர்நிலைக் கல்வி வரி 1% ஆக மொத்தம் ரூ.8,883/-

**மாமன்றத்தீர்மானம் எண்.326**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) மு.நி.2/032964/2012**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆனால் கொசு ஒழிப்பு பணியை முழுமையாக செயல்படுத்த கொசுக்களின் லார்வா நிலையிலேயே கொசுக்களை அழிக்கப்பட வேண்டும். அவ்வாறு அழிக்கப்படும் பட்சத்தில் தான் கொசுக்களின் உற்பத்தி பெருக்கத்தை குறைக்க இயலும்.

தற்போது இரண்டாம் கட்டப்பணியாக கொசு ஒழிப்பு பணிக்கு புகைப்பரப்பும் பணியே செயல்பட்டு வருகிறது. இந்தப்பணியில் அதிக அளவில் கொசுக்களின் உற்பத்தியை குறைக்க இயலாது. எனவே கொசுக்களின் ஆரம்ப கட்டமான லார்வா கட்டத்திலேயே ஒழிப்பதற்கு மதுரை மாநகராட்சியில் அத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான முதுநிலை பூச்சியியல் வல்லுனர் (Senoir Entomologists), இளநிலை பூச்சியியல் வல்லுனர் (Junior Entomologists), பூச்சியியல் உதவியாளர் (Entomologists Assistant) மற்றும் களப்பணி உதவியாளர்கள் (Field Assistant) பணியிடங்கள் கண்டிப்பாக தேவைப்படுகிறது.

ஆனால் மதுரை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசாணை எண். 237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.09.1996-ன்படி மேற்கண்ட பணியிடங்கள் ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. ஆனால் 1996-க்கு முந்தைய அரசாணையில் மதுரை மாநகராட்சிக்கு களப்பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

பார்வை 2–ல் கண்டுள்ள தமிழ்நாடு பொது சுகாதார பூச்சியியல் வல்லுனர்கள் சங்கம் (TamilNadu Public Health Entomologists Association) தமிழக அரசிற்கு சமர்ப்பித்துள்ள மனுவில் கொசு ஒழிப்பு ஆரம்ப கட்ட பணியை கீழ்கண்டவாறு செயல்படுத்தினால் கொசு ஒழிப்பு பணியை முழுமையாக செய்ய இயலும் என்று தெரிவித்துள்ளார்கள்.

1) ஆணையாளர்

2) நகர்நல அலுவலர்

3) உதவி நகர்நல அலுவலர்

4) முதுநிலை பூச்சியில் வல்லுநர் – மைய அலுவலகம்

(Senoir Entomologists)

5) இளநிலை பூச்சியியல் வல்லுனர் – மண்டலத்திற்கு ஒன்று வீதம் 4 பணியிடம்
(Junior Entomologists)

6) களப்பணி உதவியாளர் – மண்டலத்திற்கு 4 வீதம் 16 பணியிடம்.
(Field Assistant)

***மேற்கண்ட பணியிடங்களை தோற்றுவிப்பதால் ஏற்படும் உத்தேச செலவின விபரம் பின்வருமாறு :–***

| வ.எண். | பதவி | ஊதிய விகிதம் | பணியிடம் | உத்தேச வருட செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | முதுநிலை பூச்சியியல் வல்லுநர் | 15600 - 34800+GP5400 | 1 பணியிடம் | ரூ.4,00,000/- |
| 2 | இளநிலை பூச்சியியல் வல்லுநர் | 9300-34800+ GP 4600 | 4 பணியிடம் | ரூ. 5,00,000/- |
| 3 | களப்பணி உதவியாளர் | 5300-20200+GP 1900 | 16 பணியிடம் | ரூ.32,00,000/- |
| **மொத்த தொகை** | | | | **ரூ. 41,00,000/-** |

தற்போது மதுரை மாநகராட்சி 100 வார்டுகளாக பிரிக்கப்பட்டு மொத்த மக்கள் தொகை 15,50,000ஆக உள்ளதாலும், தற்போது மாநகராட்சிப் பகுதிகளில் அதிக அளவு டெங்கு காய்ச்சல் மற்றும் மூளை காய்ச்சல் பரவி வருவதால் கொசு ஒழிப்பின் அடிப்படை பணியான இந்த முதல் கட்டப் பணியினை செய்வதற்கு மேற்கண்ட பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும், உத்தேச செலவினங்களை செய்வதற்கும் இந்த பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும் அரசின் உறுதியாக்கம் பெறுவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.327**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) மநி 1/5993/2010**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் அரசாணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.09.1996-ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடங்களில் தற்போது கீழ்கண்ட மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

அலோபதி மருத்துவர் – 13 பணியிடம்

சித்த மருத்துவர் – 1 பணியிடம்

ஆயுர்வேத மருத்துவர் – 1 பணியிடம்

மேற்கண்ட பணியிடங்களை நியமனம் செய்வது சம்பந்தமாக அரசாணை எண். 19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை நாள் :18.01.2007 மதுரை மாநகராட்சி பொது நிதி செலவினம் 49% மேல் இருந்ததால் அரசின் உறுதியாக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

தற்போது மதுரை மாநகராட்சியின் மொத்த செலவினம் 47.41% ஆக இருந்து வருவதாக அரசிடமிருந்து உரிய தெளிவுரை பெறப்பட்டுள்ளது. எனவே மதுரை மாநகராட்சியின் மொத்த செலவினம் தொடர்ந்து 47.41% ஆக இருந்து வருவதால், மருத்துவ அலுவலர் பணியிடம் மிக முக்கியமான பணியிடமாக இருப்பதாலும், தற்போது மதுரை மாநகராட்சி 100 வார்டுகளாக எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாலும் காலியாக உள்ள 15 மருத்துவ அலுவலர் பணியிடங்களை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பணிமூப்பு அடிப்படையில் பட்டியல் பெற்று பணி நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.328**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) ம.பொ.3/ம.எண்.130/12-13**

மதுரை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.94ல் உள்ள அவனியாபுரம் வெள்ளைக்கல் குப்பை உரக்கிடங்கின் தெற்கு பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பொருட்டு ரூ.95.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெறப்பட்டு கடந்த 15.11.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. மேலும் இம்மதிப்பீடானது 2011-12ம் ஆண்டு விலை விகிதத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளியில் L1 ஒப்பந்ததாரர் S.ரத்தினம், மதுரை அவர்கள் தெரிவித்துள்ள விலை

விகிதமானது நடப்பாண்டு மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 12.51% குறைவாக இருப்பதால் அன்னாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்திரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.329**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) ம.பொ.3/ம.எண்.191/12-13**

மதுரை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண். 94 ல் உள்ள அவனியாபுரம் வெள்ளைக்கல் கழிவு நீரேற்று நிலையத்திற்கு கூடுதலாக கட்டப்படும் கழிவுநீர் சேகரிப்பு தொட்டிக்கு (Collection Well) Submersible Pump அமைக்கும் வேலைக்கு ரூ.95.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்ற தீர்மானம் எண்.215, நாள் 27.07.2012 ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. பின்னர் "E" டெண்டர் முறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன. அதில் L1 ஒப்பந்ததாரர் திரு.V.விஜயகுமார், வடக்கு சித்திரைவீதி, மதுரை என்பவர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு (2011-12ம் ஆண்டு) 10% கூடுதலாக கொடுத்துள்ளதற்கு அன்னாரிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு 4.95% கூடுதலாக செய்து தர சம்மதக்கடிதம் கொடுத்துள்ளதை ஏற்று அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.330**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) ம4/ 45321/13**

மதுரை மாநகராட்சியுடன் புதிததாக இணைக்கப்பட்டுள்ள வார்டுப் பகுதிகளான மண்டலம் 4–ல் வார்டு எண்.95,96 மற்றும் வார்டு எண்.96 ஆகிய வார்டு பகுதிகளுக்கு ஆழ்துளைக் கிணறு மூலம் உப்புத் தண்ணீர் சீராக விநியோகம் செய்யும் பொருட்டு திருப்பரங்குன்றம் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் 15 பணியாளர்கள் கடந்த 01.04.2011 முதல் 31.03.2012 வரை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.132/-வீதம் ஒரு வருடத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.7.13/-லட்சம் வீதம் திருப்பரங்குன்றம் நகராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்று பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் மேற்படி திருப்பரங்குன்றம் நகராட்சி பகுதியானது மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டதன் காரணத்தினாலும் இப்பணியாளர்களின் ஒப்பந்த காலம் கடந்த 31.03.2012 அன்றுடன் முடிவடைந்த நிலையிலும் மேற்படி பணியாளர்களின் சப்ளை உத்திரவு காலத்தினை 01.04.2012 முதல் 31.03.2013 வரை ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்யவும் மேற்படி பணியாளர்களுக்கு கடந்த 01.04.2012 முதல் 31.01.2013 வரை வழங்குவதற்கும் 01.02.2013 மற்றும் 31.03.2013 வரை ஆகிய மாதங்களுக்கு தொடர்ந்து ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.331**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12) ம.பொ. 4/ம.எண். 5/12–13**

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை பணிகள் நிறைவேற்றப்பட்ட போது பழுதடைந்த சாலைகளையும் இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தின் கீழ் குழாய்கள் அமைக்கப்பட்ட சாலைகளையும் மற்றும் வெள்ள சேதத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகளையும் மற்றும் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ள முக்கிய சாலைகளையும் சீரமைக்க வேண்டி 59.517 கி.மீ. நீளத்திற்கு ரூ. 24.06 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு "தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் 2012 (TURIP)ன்" கீழ் நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி ஏற்கனவே கடிதம் மற்றும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் சிப்பங்கள் வாரியாக பிரிக்கப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு (மாமன்றத் தீர்மானம் எண். 294, நாள். 28.11.2012) நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் ஒப்புதல் பெறப்பட்டு கடந்த 28.12.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. அவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 28.12.2012 அன்று திறக்கப்பட்டு தொழில்நுட்ப விபரங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தொழில்நுட்ப குழுவின் மூலம் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சம்) | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விபரம் |
|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *5* |
| 1 | சிப்பம் 1 | ம.பொ. 4/ ம.எண். 1/ 12–13<br>மண்டலம் 1 வார்டு எண். 1,2,3,4,5,7, 18,19,22 மற்றும் 23 வார்டுப் பகுதிகளில் தார் சாலை அமைத்தல் | 413.40 | திரு. அருள்ராஜ் | மதிப்பீட்டு விலை விகிதம் 2.27% அதிகம் |

| வ. எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சம்) | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விபரம் |
|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *5* |
| 2 | சிப்பம் 2 | ம.பொ. 4/ ம.எண். 2/ 12–13<br>மண்டலம் 2 வார்டு எண். 24,25,26,28, 29,30,31,32,39,40,41 மற்றும் 42 வார்டுப் பகுதிகளில் தார் சாலை அமைத்தல் | 455.60 | மெசர்ஸ். விக்னேஷ் அன் கோ | மதிப்பீட்டு விலை விகிதம் 3.96% அதிகம் |
| 3 | சிப்பம் 3 | ம.பொ. 4/ ம.எண். 3/ 12–13<br>மண்டலம் 3 வார்டு எண். 50,51,52, 55,56,58,59,60,61,62 மற்றும் 63 வார்டுப் பகுதிகளில் தார் சாலை அமைத்தல் | 418.70 | மெசர்ஸ். விக்னேஷ் அன் கோ | மதிப்பீட்டு விலை விகிதம் 4.71% அதிகம் |
| 4 | சிப்பம் 4 | ம.பொ. 4/ ம.எண். 4/ 12–13<br>மண்டலம் 2 வார்டு எண். 48,49 மற்றும் மண்டலம் 4 வார்டு எண். 76,84,85,94, 95,96,97 மற்றும் 98 வார்டுப் பகுதிகளில் தார் சாலை அமைத்தல் | 402.10 | மெசர்ஸ். விக்னேஷ் அன் கோ | மதிப்பீட்டு விலை விகிதம் 3.19% அதிகம் |
| 5 | சிப்பம் 5 | ம.பொ. 4/ ம.எண். 5/ 12–13<br>மண்டலம் 1 வார்டு எண். 8,20,21 மண்டலம் 2 வார்டு எண். 37,38,44 மண்டலம் 3 வார்டு எண். 51,52,55,57, 65,67,69 மற்றும் 75 வார்டுப் பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 487.50 | மெசர்ஸ். S.R.M. எண்ட்ர் பிரைசஸ் | மதிப்பீட்டு விலை விகிதம் 4.00% அதிகம் |
| 6 | சிப்பம் 6 | ம.பொ. 4/ ம.எண். 6/ 12–13<br>மண்டலம் 4 வார்டு எண். 77,79,88,92, 95,96,97 மற்றும் 99 வார்டுப் பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 228.95 | திரு. மணிவண்ணன் | மதிப்பீட்டு விலை விகிதம் 4.62% அதிகம் |
| | | **மொத்தம்** | **2406.25** | | |

மேற்கண்டவாறு ஒப்பந்தக்காரர்கள் தெரிவித்துள்ள விலை விகிதத்தினை ஏற்று சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.332**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 20.02.2013**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2013-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27-ம் நாள் புதன்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

1) <u>**மவ1/24688/2007**</u>

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட அசையாச் சொத்துக்களாகிய கடைகள், கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுவதற்கும், குத்தகையை புதுப்பிப்பது குறித்தும், திருத்திய நடைமுறைகள் குறித்து வெளியிடப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 03.07.2007 தேதிய அரசாணை எண்:92–ல் லைசென்ஸ் காலம் 9 ஆண்டுகள் பூர்த்தியாகும் கடைகளுக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனவும், மாநகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்துக்கு குத்தகைக்கு விடப்படலாம். மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதின் பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே (Automatically) புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரை புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை தொகை 15% உயர்த்தப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 01.04.2007 முதல் 31.03.2010 வரை முதல் தொகுப்பாண்டுக்கு மாமன்றத்தீர்மானம் எண்.:272 நாள்:27.12.2007–ல் மாத வாடகை நிர்ணயம் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

01.04.2010 முதல் 31.03.2013 முடிய உள்ள இரண்டாம் தொகுப்பாண்டுக்கு **31.03.2010**ம் தேதிய மாத வாடகை தொகையில் 15% உயர்வு செய்ய மாமன்ற தீர்மானம் எண்:**876** நாள்:25.02.2010 ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது, 01.04.2013 முதல் 31.03.2016 முடிய உள்ள மூன்றாம் தொகுப்பாண்டுக்கு 31.03.2013-ம் தேதிய மாத வாடகை தொகையில் 15% உயர்வு செய்வது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.333</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

2) <u>**ம.நி.2/000446/13**</u>

மதுரை மாநகராட்சி அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை நாள் :26.09.1996-ன்படி இளநிலை உதவியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் பணியிடங்களுக்கு கீழ்கண்டவாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

| பதவி | ஒதுக்கீடு | 01.01.2013-ல் பணியாற்றுபவர் எண்ணிக்கை | காலிப்பணியிடம் |
|---|---|---|---|
| இளநிலை உதவியாளர் | 105 | 35 | 70 |
| வருவாய் உதவியாளர் | 72 | 12 | 60 |
| **மொத்தம்** | | | **130** |

வருவாய் உதவியாளர் பணியிடம் புதிய பணிவிதிகளின்படி இளநிலை உதவியாளர் பணியிடத்திலிருந்து பணிமாறுதல் செய்யப்படும் பணியிடமாகும்.

தற்போது மதுரை மாநகராட்சி 100 வார்டுகளாக பிரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது தற்போது இளநிலை உதவியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் பணியிடங்கள் அதிகமாக காலியாக இருப்பதால், வசூல் பணிகள் மற்றும் அலுவலக பணிகள் தேக்கம் அடைந்துள்ளது.

எனவே காலியாக உள்ள 130 பணியிடங்களில் 25% சதவிகித பணியாளர்கள் கருணை அடிப்படையில் காலஞ்சென்ற வாரிசுதாரர்களுக்கு நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்து, மீதி உள்ள பணியிடங்களை பதவி உயர்வு மூலமாகவும், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாகவும் நிரப்புவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.334</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

3) **<u>ம.நி.10/005474/2013</u>**

மதுரை மாநகராட்சி 100 வார்டுகளாக பிரிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் வ.உ.மேயர் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. தற்போது மதுரை மாநகராட்சியில் பல முக்கியமான பணிகள் மத்திய, மாநில அரசின் நிதி உதவிகளுடனும், தனியார் பங்களிப்பு மூலமாகவும் மற்றும் மாநகராட்சி நிதிகளைக் கொண்டும் நடைபெற்று வருகிறது. மற்றும் சிறப்பு திட்டப் பணிகள், சமூக நலப்பணிகள், அத்தியாவசியப்பணிகள் நடைபெற்று வருவதை ஒருங்கிணைப்பு பணி செய்து அரசிற்கும் நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கும் உரிய ஆவணங்கள் தயாரித்து அனுப்ப வேண்டிய பணி முக்கியப் பணியாக உள்ளது.

தற்போது மதுரை மாநகராட்சி அரசாணை எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.09.1996-ன்படி "Personal Assistant" (தனி எழுத்தர்) பணியிடங்கள் கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. வணக்கத்திற்குரிய மேயர் அலுவலகம் | – | 1 பணியிடம் |
| 2. ஆணையாளர் அலுவலகம் | – | 1 பணியிடம் |
| 3. துணை ஆணையாளர் அலுவலகம் | – | 1 பணியிடம் |

மேற்கண்ட "Personal Assistant" (தனி எழுத்தர்) பணியிடம் உதவியாளர் பணியிடத்திலிருந்து பணிமாறுதல் செய்யப்படும் பணி இடமாகும். உதவியாளர் பணியிடத்தில் பணிபுரிந்து வரும் நபர்கள் யாரும் தட்டச்சு மேல்நிலை மற்றும் கீழ்நிலை STENO தேர்ச்சி பெறாததால் தகுதி வாய்ந்த நபர்கள் இல்லாத காரணத்தால், வணக்கத்திற்குரிய மேயர் அலுவலகம் மற்றும் ஆணையாளர் அலுவலகம், துணை ஆணையாளர் அலுவலகங்களில் பணிகள் சுணக்கம் ஏற்படுவதால் முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தின் அடிப்படையில் உரிய தகுதியுடைய மூன்று பணியாளரை நியமனம் செய்ய தேர்வு செய்யலாம். அன்னாருக்கு தொகுப்பூதியத்தின் அடிப்படையில் மாத சம்பளமாக ரூ.10,000/- நிர்ணயம் செய்யலாம். மேற்கண்ட பணியிடம் தோற்றுவிப்பதற்கும், தொகுப்பூதியத்தின் அடிப்படையில் தகுதியான பணியாளர் நியமனம் செய்வதற்கும், தொகுப்பூதியம் வழங்குவதற்கும் இந்த பணியிடத்தை ஓராண்டிற்கு மட்டும் நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.335</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**(ஒம்..) வி.வி.ராஜன்செல்லப்பா**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 25.02.2013**
**மதுரை.**

* * * * * * * *

# மதுரை மாநகராட்சி

## மாமன்றக் கூட்டம்

# Table Agenda - நாள் : 27.02.2013

1) மவ2/00073/13

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வருவாய் தரும் இனங்களான மார்க்கெட்டுகள், நவீன கட்டண கழிப்பறைகள், மாடுவதை செய்யுமிடம், வாகன காப்பகங்கள், டி.வி விளம்பரங்கள் மற்றும் இதர இனங்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளபடி 2013-2014 ஆம் ஆண்டிற்கு ஏலம் விடக்கூடிய இனங்களுக்கு உரிமம் வழங்க பொது ஏலம் / டெண்டர் நடத்துவதற்கு பொது ஏல அறிவிப்பு அறிவிக்கை மற்றும் கீழ்க்கண்ட குறிப்புகளும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

குறிப்பு:

1. 2013-14-க்கு பொது ஏலம் விடக்கூடிய இனங்களுக்கு சென்ற வருட உரிமம் வழங்கப்பட்ட தொகையிலிருந்து 5 சதவீதம் உயர்வு செய்து மாநகராட்சி மதிப்பு நிர்ணயம் செய்யவும் 2012-13 ஆம் ஆண்டில் ஏலம் போகாத இனங்களுக்கு சென்ற ஆண்டு ஏல மதிப்பினை நடப்பு ஆண்டிற்கும் நிர்ணயம் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.
2. ஒரே இனமாக இருந்த சுற்றுலா வாகனங்களுக்கு வசூல் உரிமத்தை இரண்டு இனங்களாக பிரிக்கப்பட்டு 2013-14 ஆம் ஆண்டிற்கு ஏலப்பட்டியலில் சேர்க்க ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.
3. மதுரை மாநகராட்சி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் உள்ள அனைத்து கழிப்பிடங்களையும் கட்டணமில்லா இலவச கழிப்பிடங்களாக மாற்ற உத்தேசித்துள்ளதால் 2013-14 ஏலப்பட்டியல் மற்றும் புதுப்பித்தல் பட்டியலில் உள்ள இனங்களை ஏலம் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கையை நிறுத்தி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.
4. ஒருங்கிணைந்த மாட்டுதாவணி மைய காய் கனி மார்க்கெட் திறந்த வெளி வாகன காப்பகத்திற்கு வந்து செல்லும் ஷேர் ஆட்டோ ஒன்றிற்கு ஒரு முறை வந்து செல்வதற்கு மட்டும் ரூபாய் 25/- என்று நிர்ணயிக்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.
5. மகளிர் சுய உதவி குழு மற்றும் தொண்டு நிறுவனம் போன்றவற்றிற்கு கழிப்பிடங்களை பராமரிக்க மாத வாடகை அடிப்படையில் கட்டணம் வசூல் செய்ய வழங்கப்பட்ட அனுமதி ஆணையை (ஒருங்கிணைந்த பேருந்து நிலையை கழிப்பறைகள் தவிர) நீட்டிப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.
6. மராமத்து மற்றும் இதர காரணங்களுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள 11 இனங்களை 2013-14 ஏலப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.
    1. முனிச்சாலை கட்டண கழிப்பறை (மராமத்து பணி)
    2. கீரைத்துரை தினசரி மார்கெட்( (மராமத்து பணி)
    3. பழைய வார்டு 52 புதிய வார்டு 54 எம்.எல்.ஏ பண்ட் தினசரி மார்க்கெட் (மராமத்து பணி)
    4. பழைய தெற்கு மண்டலம் பின்புறம் உள்ள கட்டண கழிப்பறை (மராமத்து பணி)
    5. நெல்பேட்டை ஆடு வதை செய்யுமிடம். (வழக்கு நிலுவையில் உள்ளது)
    6. பழைய வார்டு 53 புதிய வார்டு 57 எம்.எல்.ஏ நிதி தினசரி மார்க்கெட்(மராமத்து பணி)
    7. மாட்டுதாவணி லாரி நிறுத்தும் இடம் (ஆம்னி பஸ் நிறுத்தும் இடம் கட்டுமான பணி நடைப்பெற்று வருகிறது.)
    8. பனகல் பார்க் வேன் நிறுத்தும் இடம்(புதிய வணிக வளாகம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது)
    9. மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் பிளாட்பாரம் எண்.3ல் உள்ள பெண்கள் கழிப்பிடம் (இலவசமாக மாற்றப்படுவதால் ஏலபட்டியலிருந்து நீக்கப்படுகிறது)
    10. மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் பிளாட்பாரம் எண்.4ல் உள்ள ஆண்கள் கழிப்பிடம் (இலவசமாக மாற்றப்படுவதால் ஏலபட்டியலிருந்து

நீக்கப்படுகிறது)

11. அவனியாபுரம் - லாரி நிறுத்துமிடம் (மராமத்து பணி)

7. கீழ்காணும் இரண்டு இனங்களை புதிய இனங்களாக ஏலப்பட்டியலில் சேர்ப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

1. பழைய அண்ணா பேருந்து நிலையம் மேற்குப்பக்கம் வேன் நிறுத்துமிடம் வசூல் செய்யும் உரிமம்.
2. மாட்டுத்தாவணி விறகுப் பேட்டையில் கனரக வாகனங்கள் நுழைவு கட்டணம் வசூல் உரிமம்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.336</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

2) **<u>H3/0627/2013</u>**

மதுரை மாநகரில் 2013-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத் திருவிழா அருள்மிகு கள்ளழகர் திருவிழாவிற்கும் மாட்டுத்தாவணிக்கும் வருகை தரும் பொது மக்களின் வசதிக்காக துப்புரவு பணிகள் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின் வசதி, தற்காலிக துப்புரவு ஊழியர்கள், ஊதியம், சாதனங்கள், கிருமி நாசினிகள், பிரச்சார விளம்பர பொருட்கள், தற்காலிக கொட்டைககள் மற்றும் இதர செலவினங்களுக்காக பொது சுகாதாரப்பிரிவின் உத்தேச செலவினம் ரூ.2243300/- மற்றும் பொறியியல் பிரிவின் உத்தேச செலவினம் ரூ.2500000/- ஆகியவைகளுக்கு ஏற்படும் உத்தேச செலவு தொகை ரூ.4743300/- (ரூபாய் நாற்பத்து ஏழு லட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ. எண். | உத்தேச செலவினங்களுக்கு ஏற்படும் பணிகள் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கள்ளழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சிக்கு ஆழ்வார்புரம் வைகை ஆற்றில் தற்காலிக பாலம் அமைத்தல் மற்றும் தடுப்புகள் அமைத்தல் | 1500000 |
| 2 | கள்ளழகர் ஆற்றில் இறங்கும் இடம் மற்றும் இராமராயர் மண்டபத்தில் மின்சார வசதி செய்தல் | 700000 |
| 3 | சித்திரை திருவிழாவிற்கு வரும் பொதுமக்களின் குடிநீர் வசதிக்காக தற்காலிகமாக ஐம்பது இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 300000 |
| 4 | துப்புரவு பணி தற்காலிக தினச்சம்பள ஊழியர்கள் சம்பளம் | 668300 |
| 5 | துப்புரவு பணி சாதனங்கள் | 500000 |
| 6 | துப்புரவு பணி கிருமி நாசினிகள், பூச்சிக்கொல்லிகள், சுண்ணாம்புத்தூள் மருந்துகள் | 1000000 |
| 7 | பிரச்சார விளம்பரம் தொடர்பான செலவினம் | 50000 |
| 8 | துப்புரவு பணி சம்பந்தமாக எதிர்பாராமல் ஏற்படும் அவசர செலவினங்களுக்கு முன்பணம் | 25000 |
| | **மொத்த செலவினம்** | **4743300** |

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.337</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

3) **<u>H6/18719/2010</u>**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட செல்லூரில் நகர்புற ஏழைகளுக்கான இரவுநேர தங்கும் விடுதியை நடத்திவரும் Madurai Jesuits Down Trodden People Welfare Trust (M.J.D.P.W) நிர்வாகத்தினர் விடுதியை நடத்த பொருளாதார ரீதியாக மிகவும் சிரமப்படுவதால், மேற்கொண்டு அவ்விடுதியை சிறப்பாக நடத்த மதுரை மாநகராட்சி மூலம் ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம்) மட்டும் வழங்கக் கோருவதால் மேற்கண்ட தொகையை சம்பந்தப்பட்ட நிறுவனத்தாருக்கு வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.338</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

4) **<u>Jn.S.2/005364/13</u>**

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சகம் நாற்பது பெருநகரங்களை தேர்வு செய்து முன் மாதிரியான வறுமை ஒழிப்புத் திட்டங்களை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளது. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட நகரங்களில் மதுரை மாநகராட்சி ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் “ **சேலன்ஜ் நிதி**” என்கின்ற தலைப்பின் கீழ் நிதி வழங்க மேற்படி அமைச்சகம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்

கீழ் குடிசைப் பகுதிகளில் பத்து இடங்களில் முதற்கட்டமாக சுகாதார வளாகம் அமைக்கவும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்கவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து மத்திய அரசிற்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்து மத்திய அரசிற்கு அனுப்பி நிதியை பெற்று மேற்படி திட்டங்களை குடிசைப்பகுதியில் நிறைவேற்ற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.339**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 27.02.2013**

## தீர்மானம் .1

பன்னாட்டு பண முதலைகள் இந்தியாவில் கொள்ளை அடிப்பதற்கு தடைக் கற்களாக இருக்கும் நாட்டின் முதுகெழும்பான விவசாயிகளை, தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசு தொடர்ந்து வஞ்சித்துவரும் இந்த வேளையில், தமிழகத்தில் போதிய பருவமழை இல்லாத காரணத்தினால் விவசாயிகள் படும் துயரங்களை கண்டு, அவர்களின் துன்பங்களை போக்குகின்ற வகையில், சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் அறிவித்து தமிழக விவசாயிகளை தாயுள்ளத்தோடு கண்ணீரை துடைத்துள்ளார்கள்.

மத்தியில் ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டு விவசாயிகளுக்கு வழங்குகின்ற உரமானியத்தை மோசடியாக ரூ.1000 கோடி அளவில் முறைகேடு செய்த தி.மு.க.வைச் சேர்ந்த மத்திய உரம் மற்றும் இராசாயனத்துறை அமைச்சர் விவசாயிகளுக்கு மிகப்பெரிய துரோகங்களை செய்துவரும் வேளையில், தமிழகத்தில் வறட்சியின் காரணமாக விவசாயிகளின் துயரங்களை போக்கும் வகையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15000/- இழப்பீடு நிர்ணயம் செய்தது மட்டுமல்லாமல், வருங்காலங்களில் வறட்சியை சமாளிக்க ஏரி, குளம் ஆகியவற்றை சீர்செய்ய ரூ.310 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, தொடர்ந்து விவசாய மக்களின் பாதுகாவலராக திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களுக்கு இம்மாமன்ற கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.319**

**மேயர்**

## தீர்மானம் .2

இலங்கையில் தமிழ் இனப் படுகொலையை கண்டித்து தொடர்ந்து போர்க்குரல் எழுப்பி, இலங்கைக்கு பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி தொடர்ந்து தமிழினத்தை காத்துவரும் இந்த வேளையில் சென்னையில் நடைபெறவுள்ள ஆசிய தடகள விளையாட்டு போட்டிகளில் இலங்கை வீரர்கள் கலந்து கொள்வதால், அந்த போட்டியை நடத்துவதை அனுமதிக்க முடியாது என்று மத்திய அரசிடம் தெரிவித்த இந்தியாவின் இரும்பு பெண்மணி, தமிழர்களின் ஒட்டுமொத்த பாதுகாவலரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களுக்கு இம்மாமன்ற கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.320**

**மேயர்**